1

## சிறப்பு வரைபடம் 1.7
## மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலும் இறக்குமதிப் போக்குகளும்

மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதுடன், தனியாள் வாகனங்கள் மீதான எஞ்சியுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் 2025 சனவரியளவில் நீக்கப்பட்டன. மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன், நீண்டகால கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய சாத்தியமான கேள்வி மிகையினைத் தணிப்பதற்கு அரசாங்கமானது பல்வேறு தீர்வை மற்றும் தீர்வையற்ற வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

இவ்வழிமுறைகளுக்கு மத்தியில், 2025இல் வாகன இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நிலவிய ஆண்டுகாலப்பகுதியில் திரண்டிருந்த வலுவான உயர்வடைந்த கேள்வியையும் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் பிரதிபலித்தது. 2025 ஏப்பிறல் முதல் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இதன்விளைவாக, தனியாள் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்கள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் மீதான செலவினம் 2025இல் ஐ.அ.டொலர் 2.04 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்து, 2015இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2.12 பில்லியன் மற்றும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2.09 பில்லியன் ஆகியவற்றுக்குப் பின்னர் மூன்றாவது அதியுயர்ந்த வருடாந்த வாகன இறக்குமதியாக விளங்கியது.

### வருடாந்த வாகன இறக்குமதிகள்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

### மாதாந்த வாகன இறக்குமதிகள்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி